



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 346 | 08.06.2026 | MONDAY | VAIKASI : 25 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 346 | 08.06.2026 | திங்கள்கிழமை | வைகாசி : 25 | விலை : ரூ.5/-


## புதுச்சேரியில் ஒரே இடத்தில் பணியில் இருப்போரை இடமாற்றம் செய்ய

# "ஆளுநர் அதிரடி உத்தரவு"



புதுச்சேரி: ஜூன்.8-

புதுச்சேரியில் பதவி உயர்வை தவிர்த்து ஒரே இடத்தில் பணியில் இருப்போரை இடமாற்றம் செய்ய துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் உத்தரவிட்டுள்ளார்.

புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் என்டிஏ கூட்டணி வென்று ஆட்சி அமைத்தாலும், அமைச்சர்கள் நியமிக்கப்பட்டாமல் இழுபறி நீடிக்கிறது. அரசு பணிகளில் தொய்வு உள்ளதாக குற்றச்சாட்டு நிலவுகிறது. இதையடுத்து துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் போக்குவரத்து பிரச்சினையால் மக்கள் பாதிக்கப்படுவதால் நீண்டகாலமாக நடக்கும் பால பணிகளை ஆய்வு செய்தார்.

அதையடுத்து அனைத்து துறை தலைவர்கள், துறைச்செயலர்களை அழைத்து துறை பிரச்சினைகளை கேட்டறிந்தார். குறிப்பாக 3 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு துறைகளில் ஏராளமானோர் பணியாற்றி வருவதால் ஏற்படும் விஷயங்களை கேட்டறிந்தார்.

அதையடுத்து அதிகாரிகள், ஊழியர்கள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை இடமாறுதல் உத்தரவை உடனடியாக செயல்படுத்த வேண்டும். பதவி உயர்வு வேண்டாம் என ஒரே இடத்தில் பணியில் இருப்பவர்களை கட்டாயம் இடமாற்றம் செய்ய வேண்டும். பிராந்திய அளவிலான இடமாற்றங்களும் கட்டாயம் பின்பற்ற வேண்டும். இந்த உத்தரவுகளை மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## "மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இந்த ஆட்சி..." மு.க.ஸ்டாலின்



சென்னை: ஜூன்.8-

மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இன்றைக்கு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என திமுக தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற, செய்யூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் பனையூர் பாபு தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். அப்போது திமுக தலைவர் ஸ்டாலின் உரையாற்றும் போது, '' திமுகவைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சியாக இருக்கும்போதுதான் வேலை அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட நேரத்தில் உழைப்பதற்குத் தயாராக நாங்கள் இருக்கிறோம், "நாங்கள் உங்களுக்குத் துணை நிற்கிறோம்" என்று நமக்கு இன்றைக்குத் துணையாக வந்து சேர்ந்திருக்கும் பாபுவை வரவேற்கிறேன்.

இன்றைக்கு நாட்டில் நடந்து கொண்டிருக்கும் ஒரு ஆட்சி எப்படிப்பட்ட ஆட்சி என்பதெல்லாம் நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் நான் சொன்னேன், "ஆறு மாதங்களுக்கு இதைப்பற்றி நான் பேசப் போவதில்லை" என்று. ஆனால், ஆறு மாதங்களுக்கு முன்பே பேச வேண்டிய ஒரு சூழ்நிலை வந்துவிடுமோ என்ற அச்சம்தான் இருந்து கொண்டிருக்கிறது; வந்துவிட்டது.

அதைப் பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள், இந்த விமர்சனங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. ஆறு மாதம் அல்ல, ஐந்து மாதம் அல்ல, நான்கு மாதம் அல்ல... மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இன்றைக்கு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில்தான் இன்றைக்கு நீங்களும் வந்து இந்த இயக்கத்தில் உங்களை இணைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, கழகம் ஈடுபடும் எந்தப் பணிகளாக இருந்தாலும், அந்தப் பணிகளுக்கு நீங்களும் ஒத்துழைப்பு தருவதற்காக வந்திருக்கிறீர்கள்" என்று அவர் பேசினார்.

## ஆன்லைன் பத்திரப் பதிவு அரசின் புதிய நடைமுறை அறிவிப்பு

சென்னை: ஜூன்.8-

பதிவுத்துறையில் இணையவழியில் "வருகை இல்லா ஆவணப்பதிவு" (Anywhere Registration) கட்டாயமாக்கல் தொடர்பான அறிவிப்பு தமிழக பத்திர பதிவுத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக பத்திர பதிவுத்துறைத் தலைவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஆவணப்பதிவு நடைமுறைகளை எளிமைப்படுத்த பொதுமக்கள் தாங்களே நேரடியாக இணையவழியே ஆவணப்பதிவு செய்வதற்கான முறையை பதிவுத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஆவணப்பதிவு முறை மூலம் பொதுமக்கள் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமல் எங்கிருந்தும் எப்போது வேண்டுமானாலும் (24X7X365) இணையதளத்தின் மூலம் இணையவழி தங்களது ஆவணங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.

ஆவணப் பதிவிற்கு சார்பதிவாளர் ஒப்புதல் அளித்ததும், சார்பதிவாளரின் மின்னணு கையொப்பத்துடன் ஆவணமானது சம்பந்தப்பட்ட நபரின் உள்நுழைவிற்கும் அலைபேசிக்கு புலனம் (Whatsapp) மூலமும் அனுப்பி வைக்கப்படும். அந்த ஆவணத்தை ஆவணதாரர்கள் தங்கள் உள்நுழைவு வழியே தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

"வருகை இல்லா ஆவணப்பதிவு (Anywhere Registration)" நடைமுறை விரைவில் கட்டாயமாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட நெறிமுறைகள் வழங்கப்படுகிறது.

சார்பதிவாளர் அலுவலகம் வராமலேயே பதிவு செய்யக்கூடிய ஆவணங்கள்:

முதல் விற்பனை மனை (First sale of Plot)

முதல் விற்பனை அடுக்குமாடி குடியிருப்பு (First sale of Flat)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய விற்பனை ஆவணங்கள்

வங்கிகளில் பெறும் கடனுக்கான அடமானம் மற்றும் ரசீது ஆவணங்கள்

பொதுமக்கள், கட்டுமான நிறுவனங்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் வங்கிகள், வழக்கறிஞர்கள்

பதிவுத்துறை இணையதளத்தில் தங்களது உள்நுழைவினை தாங்களே உருவாக்கி மேற்படி ஆவணங்களை(ரசீது) இணையவழியில் சமர்ப்பிக்கலாம்.

ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர்கள், எழுதிப் பெறுபவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகிய அனைவருக்கும் ஆதார் அட்டை மேலேற்றம் செய்யவேண்டும்

ஆதார் ஆணையத்தின் மூலம் கைரேகை அல்லது கருவிழி படலம் வழி ஆதார் சரிபார்க்கப்பட வேண்டும்.

தொழில்நுட்ப தேவைகள்

இணைய இணைப்பு

UIDAI அங்கீகரிக்கப் பட்ட எல்1 விரல் ரேகை இயந்திரம் மற்றும் கருவிழிப்படலம் கவரும் கருவி

புகைப்படக் கருவி (Webcam)

சந்தேகங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

வன்பொருள்(Hardware): முகமது யூனுஸ், அருண்குமார் 7397574067 9940446694

மென்பொருள் (Software): சீனிவாஸ் கணேஸ், டில்லி பாபு 6369798973 8525805957

## வீட்டு உபயோகத்திற்கான காஸ் சிலிண்டர் விலை ரூ.29 உயர்வு



சென்னை, ஜூன்.8-

வீட்டு உபயோகத்திற்கான காஸ் சிலிண்டர் விலை ரூ.29 உயர்த்தப்பட்டு உள்ளது. இந்த புதிய விலை உயர்வு ( ஜூன் 7) முதல் அமலுக்கு வந்துள்ளது.

இந்தியன் ஆயில், பாரத், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், ஆகிய பொதுத் துறையை சேர்ந்த எண்ணெய் நிறுவனங்கள், வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், ஹோட்டல் உள்ளிட்ட வணிகப் பிரிவுக்கு, 19 கிலோ எடையிலும், சமையல் காஸ் சிலிண்டர்களை வினியோகம் செய்கின்றன.

இந்நிறுவனங்கள், சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலைக்கு ஏற்ப, உள்நாட்டில் மாதந்தோறும் முதல் நாளன்று, சமையல் காஸ் சிலிண்டர் விலையில் மாற்றம் செய்கின்றன.

தமிழகத்தில், இம்மாதம் (ஜூன் 1ம் தேதி), வீட்டு காஸ் சிலிண்டர் விலை மாற்றம் செய்யப்படாமல், 928.50 ரூபாயாகவே இருந்தது. வணிக காஸ் சிலிண்டர் விலை, 46 ரூபாய் உயர்ந்து, 3,237 ரூபாயில் இருந்து, 3,283 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று (ஜூன் 7) நாடு முழுவதும் 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.29 உயர்ந்துள்ளது. சென்னையில் ரூ.928.50 ஆக இருந்த சிலிண்டர் விலை 957.50 ரூபாயாக அதிகரித்து இருக்கிறது.

அதேபோல் டில்லியில் ரூ.942 ஆகவும், மும்பையில் ரூ.941.50 ஆகவும், கொல்கத்தாவில் ரூ.968 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. வீட்டு உபயோகத்திற்கான காஸ் சிலிண்டர் விலை உயர்ந்து இருப்பது பெண்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000


## "திமுக அடித்த கமிஷனை கூட்டணி தர்மத்துக்காக வெளியே சொல்லவில்லை" : மாணிக்கம் தாகூர்

சிவகாசி: ஜூன்.8-

திமுக அடித்த கமிஷனை பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாலும் கூட்டணி தர்மத்திற்காக நாங்கள் அதை வெளியே சொல்லவில்லை என்று காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

சிவகாசியில் நடைபெற்ற திருமண விழா ஒன்றில் கலந்து கொண்ட மாணிக்கம் தாகூர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: 2026 தேர்தல் தோல்வி பலருக்கும் ஷாக் கொடுத்துள்ளது. அதில் இருந்து மீள முடியாத சிலர் புலம்பி வருகின்றனர். இவ்வளவு நாட்களாக உதயநிதி இடம் இருந்து வந்த புலம்பல் தற்போது சீமானிடம் இருந்து வருகிறது.

பிச்சை எடுப்பதையே தொழிலாக வைத்துள்ள, சொந்த மாவட்டத்திலேயே டெபாசிட் வாங்க முடியாத சீமான் 100 ஆண்டு பாரம்பரிய கட்சியை பற்றி பேசுவது வேடிக்கையாக உள்ளது. சீமான் மரியாதையாக பேசாவிட்டால் அதே பாணியில் காங்கிரஸ் காரன் திருப்பி அடிப்பான். இங்கிலாந்து, கனடாவுக்கு வசூல் செய்ய செல்லும் சீமான், இலங்கைக்கு சென்று தமிழர்களை பார்க்கவில்லை.

2014ல் காங்கிரஸ் தனியாக போட்டியிட்டு தோல்வி அடைந்தது. 2016ல் தனியாக போட்டியிட்ட திமுகவும் தோல்வி அடைந்தது. அதன்பின் திமுக தான் கூட்டணிக்கு வந்தது. ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவியுங்கள் என நாங்கள் கேட்கவில்லை. தமிழ்நாட்டில் ராகுல் காந்தி மீது இருக்கும் நம்பிக்கை, மரியாதையை வாக்குகளாக மாற்ற வேண்டும் என்பதற்காக ஸ்டாலின், ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக காட்டினார்.

சீமானின் செல்வாக்கு சரிய ஆரம்பித்து விட்டது. திமுக ஆதரவில் வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்பிக்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என சீமான் பேசியுள்ளார். காங்கிரஸ் வாக்குகளை பெற்று வெற்றி பெற்ற உதயநிதியை ராஜினாமா செய்ய சொல்லுங்கள். உதயநிதி ராஜினாமா செய்த 24 மணி நேரத்தில் நான் எனது பதவியை ராஜினாமா செய்வேன். சவாலுக்கு தயாரா என சீமான் தனது தம்பி உதயநிதியிடம் கேட்டு சொல்ல வேண்டும்.

தேர்தலுக்கு முன் திமுகவை விமர்சித்த சீமான், அனிதா ராதாகிருஷ்ணன் சீர் கொடுத்த பின்னர் உதயநிதிக்கு ஜால்ரா அடிக்கிறார். திமுக தோல்விக்கு பென் நிறுவனம் காரணமா அல்லது உதயநிதி காரணமாக என நடக்கும் விவாதத்தை மறைக்க காங்கிரஸ் மீது பழி போடுகிறது திமுக.

கருணாநிதி மறைவுக்குப் பின் திமுக எந்த திசையில் செல்கிறது என்பதை பார்க்க வேண்டும். உண்மையான திமுககாரர்கள் வீட்டில் இருக்கிறார்கள். வாடகைக்கு ஆட்களை அழைத்து வந்து அரசியல் செய்து கொண்டிருக்கின்றனர். மே 4ம் தேதி திமுக அதிமுக கூட்டணி அமைக்க பேச்சு நடத்தியதால் நாங்கள் திமுக தலைவரை பார்க்க செல்லவில்லை.

உதயநிதி பாஜகவுடன் அண்டர் டீலிங்கில் இருப்பதை தோலுரித்து காட்டுவோம். விஜய் ஆட்சியமைப்பதை தடுக்க பாஜக மேற்கொண்ட முயற்சியின் முக்கிய புள்ளியாக உதயநிதி இருந்தார். திமுகவால் காங்கிரசும் தோற்று 18 எம்எல்ஏக்களில் இருந்து 5 ஆக குறைந்து விட்டோம். சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்து விட்டோம். வரும் காலங்களில் உதயநிதி தலைமையில் திமுக மிகப்பெரிய தோல்விகளை சந்திக்கும்.

கூட்டணி ஆட்சியும், நேர்மையான ஆட்சியும் காங்கிரஸின் இரு கண்கள். முதல்வர் விஜய் ராகுல் காந்தி இடையிலான நல்ல நட்பு அனைவரும் அறிந்தது. இந்த கூட்டணி தொடர்ந்து நீடிக்கும்.

நெடுஞ்சாலைத்துறை, நகர்ப்புற வளர்ச்சித்துறைகளில் இருந்த 36 சதவிகித கமிஷன், பத்திரப்பதிவு செய்ய ஒரு ஏக்கருக்கு திமுக பெற்ற ரூ.7 லட்சம் நன்கொடை ஆகியவை தற்போது முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. இதே போல் பல துறைகளில் ஊழல் குறைந்து வருகிறது. திமுக வாங்கிய கமிஷனை பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தாலும் கூட்டணி தர்மத்திற்காக அதை வெளியில் சொல்லவில்லை.

பாஜக அனைத்து தில்லாலங்கடி வேலைகளை செய்தும் தமிழகத்தில் வெற்றி பெற முடியாததால், பெயரை, உடையை மாற்றி அண்ணாமலையை இறக்கி விட்டுள்ளனர். அண்ணாமலையின் புதிய கட்சி ஆர்.எஸ்.எஸ்ஸின் பி பிளான். புதிய முகமூடியுடன் வந்துள்ள அண்ணாமலைக்கு எனது வாழ்த்துக்கள். ராஜினாமாவை ஏற்றுக் கொண்டோம் என பாஜக இதுவரை கடிதம் மூலம் அறிவித்தது இல்லை. போலிகளை தமிழக மக்கள் நம்பமாட்டார்கள்.

அதிமுக வரலாறாக மாறிக்கொண்டிருப்பது வருத்தமான விஷயம். விருதுநகர் மாவட்டத்தில் கட்சியை முடித்தது ராஜேந்திர பாலாஜி என்றால், தமிழகத்தில் மொத்தமாக முடித்து வைத்த பெருமை பழனிச்சாமியை சாரும். எம்ஜிஆர், ஜெயலலிதா ஆத்மா இந்த துரோகத்தை மன்னிக்காது.

உதயநிதியால் பழுதடைந்த தமிழக அரசு இயந்திரத்தை சரி செய்ய கொஞ்சம் கால அவகாசம் கொடுங்கள். பினராய் விஜயனும், பாஜகவும் ரகசிய கூட்டணியில் இருக்கிறார்கள் என்பது கேரள காங்கிரஸ்காரர்களின் எண்ணமாக இருந்தது. அதையே பிரச்சாரத்தின் போது ராகுல் காந்தி குறிப்பிட்டார். மார்க்சிஸ்ட் கட்சியின் கடிதத்துக்கு நாங்கள் ஜனநாயகப்பூர்வமாக பதில் அளிப்போம். பாஜக எதிர்ப்பு அரசியலில் தொடர்ந்து இணைந்து செயல்படுவோம்.

நாடாளுமன்றத்தில் பாஜக கூட்டணி, இண்டியா கூட்டணி, பாஜக பி டீம் என 3 அணிகள் உள்ளன. பாஜக பி டீமில் புதிதாக ஒரு கட்சி விரைவில் சேர்ந்து விடும். ஜீன் 8ல் நடைபெறும் இண்டியா கூட்டணி கூட்டத்தில் திமுக பங்கேற்காது என அறிவித்ததன் மூலம், அக்கட்சி பாஜகவின் பீ டீம் என்பது உறுதியாகி உள்ளது. இவ்வாறு மாணிக்கம் தாகூர் தெரிவித்தார்.

# அரசு ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்டு ஏழைகளுக்கு வழங்குங்கள்!"
## முதல்வருக்கு காயல் அப்பாஸ் அதிரடி கோரிக்கை



காயல்பட்டினம், ஜூன்.8-

காயல்பட்டினம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரசுப் புறம்போக்கு நிலங்களை முறையாக ஆய்வு செய்து மீட்டு, வாடகை வீட்டில் வசிக்கும் ஏழை மக்களுக்குத் தாமதமின்றி வழங்க வேண்டும்" என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநிலத் தலைவர் காயல் அப்பாஸ் தமிழக அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அதிகாரப் பூர்வ அறிக்கையில், "தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினத்தில் சொந்தமாக வீடோ அல்லது நிலமோ இல்லாமல் எண்ணற்ற ஏழை எளிய குடும்பங்கள் வாடகை வீடுகளில் வசித்து வருகின்றனர். இந்த நிலையில், வீட்டு உரிமையாளர்கள் ஆண்டுதோறும் வாடகையை உயர்த்தி வருவதால், சாமானிய மக்கள் மாதாந்திர வாடகை செலுத்த முடியாமல் பெரும் பொருளாதாரச் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை, கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு சில தனி நபர்கள் தங்களது பெயருக்குப் போலிப் பட்டாக்களைப் பதிவு செய்து ஆக்கிரமித்து வைத்துள்ளனர். இத்தகைய அராஜகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் மீது சட்டரீதியாக வழக்குப் பதிவு செய்து, கடுமையான தண்டனை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள், இந்த ஆக்கிரமிப்பு நிலங்களை உடனடியாகக் கைப்பற்றி, சொந்த வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு விரைவாகப் பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும்" என்று தனது அறிக்கையில் காயல் அப்பாஸ் வலியுறுத்தியுள்ளார்.



# தலித் உடலை புதைக்க எதர்ப்பு : இசிஆர் சாலையில் மறியல் போராட்டம்

விழுப்புரம், ஜூன்.8-

விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் பகுதியில், தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரின் உடலைப் புதைக்க மற்றொரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்துத் தாக்குதல் நடத்திய சம்பவம், அப்பகுதியில் பெரும் சட்டம்ஒழுங்கு விவாதத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இப்பகுதியில் தலித் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் காலமானதைத் தொடர்ந்து, அவரது உடலை முறைப்படி புதைப்பதற்காக உறவினர்களும் பொதுமக்களும் கொண்டு சென்றுள்ளனர். அப்போது, அங்கிருந்த மீனவ சமூகத்தைச் சேர்ந்த ஒரு தரப்பினர், உடலை அங்குப் புதைக்கக் கூடாது என்று கூறி திடீரென கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த வாக்குவாதம் முற்றிய நிலையில், பிணத்தைப் புதைக்கச் சென்றவர்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வதிரடித் தாக்குதலால் ஆத்திரமடைந்த தலித் பகுதி பொதுமக்கள், உயிரிழந்தவரின் பிணத்தை அப்படியே எடுத்து வந்து, புதுச்சேரி சென்னை இடையேயான முக்கியப் போக்குவரத்தான இசிஆர் சாலையில் வைத்து அதிரடி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் திடீர் மறியல் காரணமாக, இசிஆர் சாலையில் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு வாகனங்கள் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்று போக்குவரத்து முற்றிலும் ஸ்தம்பித்துள்ளது. சம்பவ இடத்திற்கு விரைந்துள்ள கோட்டக்குப்பம் மற்றும் மாவட்டக் காவல்துறை அதிகாரிகள், இருதரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்திப் பதற்றத்தைத் தணிக்க தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

# கிரஷர் அமைக்க எதிர்ப்பு: மணப்பாறை அருகே மின் கம்பத்தில் ஏறி இளைஞர் போராட்டம்




மணப்பாறை, ஜூன்.08-

மணப்பாறை அருகே கிரஷர் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து மின்கம்பத்தில் ஏறி தற்கொலை விடுத்த இளைஞரால் பரபரப்பு ஏற்பட்டது.

திருச்சி மாவட்டம், மணப்பாறையை அடுத்த ஆ.தோப்புப்பட்டி அருகே உள்ள இனாம்கோவில்பட்டி கிராமம் ரெட்ட மலையில் தனியார் கிரஷர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கிரஷர் அமைத்தால் அந்த பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டு, விவசாயம் பொய்த்து போகும் என்பதுடன், கால்நடை வளர்ப்பும் தடைபட்டு விடும் என்பதால் கிரஷர் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல் மற்றும் தேர்தல் புறக்கணிப்பு உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை அந்த பகுதி மக்கள் நடத்தினர்.

இதனால் கிரஷர் அமைக்கும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மேலும் மணப்பாறை தவெக எம்எல்ஏ ஆர்.கதிரவனை சந்தித்து கிரஷர் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து கிராம மக்கள் நேற்று கோரிக்கை மனு அளித்தனர்.

இந்நிலையில் மீண்டும் கிரஷர் அமைக்கும் பணி தொடங்கியது. இதையடுத்து அந்த பகுதியைச் சேர்ந்த கோபி (எ) கோபால கிருஷ்ணன் (29) அங்குள்ள உயர் அழுத்த மின்கம்பத்தில் ஏறி திடீர் போராட்டத்தில் ஈடுபட்டார். மேலும், கிரஷர் அமைத்தால் மின் கம்பியை பிடித்து தற்கொலை செய்து கொள்ளப்போவதாக கூறியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து தகவலறிந்த அப்பகுதி மக்கள் சம்பவ இடத்தில் திரண்டனர். இதனை தொடர்ந்து கிரஷர் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அங்கு திரண்டிருந்த மக்கள் கோபால கிருஷ்ணனிடம் பேசி சமாதானம் செய்தனர். பின்னர் மின்கம்பத்தில் இருந்து அவர் கீழே இறங்கினார். கிரஷர் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து இளைஞர் உயரழுத்த மின்கம்பத்தில் ஏறி போராட்டம் நடத்திய சம்மபவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது குறித்து வையம்பட்டி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் கிராம மக்கள் சார்பாக கிரஷர் வேலையை நிறுத்தக்கோரி மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு கடந்த ஜூன் 1ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.





■ புதுச்சேரி திருமங்கலம்,அருள்மிகு சிவகாமசுந்தரி உடனமர் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் 12ஆம் ஆண்டு திருக்கல்யாண வைபவ விழாவில் மாண்புமிகு அமைச்சர் ஆ.நமச்சிவாயம் மற்றும் வசந்தி நமச்சிவாயம் ஆகியோர் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# முன்னணி பொறுப்பாளர்கள் குறித்து பொதுவெளியில் பேசிய விவகாரம்
## வி.சி.க., மாநில நிர்வாகி இடைநீக்கம்: திருமாவளவன் நடவடிக்கை

சென்னை, ஜூன்.08-

விசிக தலைவர் திருமாவளவன் வெளியிட்ட அறிவிப்பு: விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இளையோர் அமைப்பான 'இளஞ்சிறுத்தைகள் எழுச்சிப் பாசறை' என்னும் துணைநிலை அமைப்பின் மாநில செயலாளர் பொறியாளர் சரவணன் என்கிற சங்கத்தமிழன் கட்சியின் கட்டுப்பாட்டைச் சீர்குலைக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். கட்சியை விட, கருத்தியலை விட, களம் காணும் மக்களைவிட, 'தானே முதன்மை' என தன்னை முன்னிறுத்தும் போக்கு, ஒரு 'தவறான முன்மாதிரியாக' அமைந்து கட்சியிலுள்ள பிறரையும் இவ்வாறு செயல்படத் தூண்டுவதாக அமையும்.



இந்நிலையில், கட்சியின் நலன்களைக் கருத்தில்கொண்டு பொறியாளர் சரவணன் என்கிற சங்கத்தமிழன், ''கட்சியிலிருந்து மூன்று மாத காலத்திற்கு இடை நீக்கம் செய்யப்படுகிறார். இடைநீக்க காலத்தில் இவர் கட்சியின் விதிமுறைகளை மதித்து, மேலும் முரண்பாடான செயல்களில் ஈடுபடாமல், கட்சியின் கட்டுப்பாட்டைக் காப்பதன் மூலமே, இவரது மேல்முறையீடு ஏற்கப்பட்டு, இடைநீக்க நடவடிக்கை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும். ஒழுங்கு நடவடிக்கைக்குரிய காலத்தில் இவர் கட்சியின் நிகழ்வுகளில், போராட்டங்களில், கட்சி சார்ந்த இன்னபிற செயற்பாடுகளில் ஈடுபடாமல் தவிர்க்க வேண்டியது இவரது இன்றியமையாத அரசியல் கடமையாகும்

# சமையல் எரிவாயு விலை உயர்வை அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் அன்புமணி



சென்னை, ஜூன்.08-

"சமையல் எரிவாயு விலை மேலும் ரூ.29 உயர்த்தப்பட்டுள்ளது. மக்களால் தாங்க முடியாத இந்த விலை உயர்வை அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும்" என பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வீட்டுப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலையை எண்ணெய் நிறுவனங்கள் மேலும் ரூ.29 உயர்த்தியுள்ளன. இதனால் சென்னையில் இதுவரை ரூ.928.50க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த வீட்டு பயன்பாடுக்கான எரிவாயு உருளையின் விலை ரூ.957.50 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மக்களின் அன்றாடத் தேவையான சமையல் எரிவாயு உருளை விலை அண்மைக்காலத்தில் இரண்டாவது முறையாக உயர்த்தப்பட்டிருப்பது பொதுமக்களை மிகக்கடுமையாக பாதிக்கும்.

கடந்த மார்ச் மாதம் 7ஆம் தேதி சமையல் எரிவாயு உருளையின் விலை ரூ.60 உயர்த்தப்பட்டது. இப்போது மேலும் ரூ.29 உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த மார்ச் மாதத்தில் ரூ. 868.50 ஆக இருந்த சமையல் எரிவாயு விலை 3 மாதங்களில் ரூ.89 உயர்ந்திருக்கிறது. இந்தக் காலத்தில் மக்களின் வருவாய் ஒரு விழுக்காடு கூட உயராத நிலையில் எரிவாயு விலை 10.25% உயர்ந்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சமையல் எரிவாயு விலை உயர்வின் பின்னணியில் உள்ள காரணங்களையும், நியாயங்களையும் புரிந்து கொள்ள முடிகிறது. மேற்காசியப் போர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில் எரிவாயு, கச்சா எண்ணெய் ஆகியவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன், விலையும் உயர்ந்திருப்பது தான் இதற்கு காரணம் என்று எண்ணெய் நிறுவனங்கள் கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை.

ஆனால், அனைத்து நெருக்கடிகளையும் கடந்து விலை உயர்விலிருந்து மக்களை பாதுகாக்க வேண்டிய தேவை அரசுக்கும், எண்ணெய் நிறுவனங்களுக்கும் உள்ளது. அந்தக் கடமையை நிறைவேற்றும் வகையில் பன்னாட்டு சந்தையில் ஏற்பட்டுள்ள விலை உயர்வை எண்ணெய் நிறுவனங்களும், அரசும் இன்னும் சில மாதங்களுக்கு தாங்கிக் கொள்ள வேண்டும்; மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள இந்த விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# "அண்ணாமலை வெளியேறிய பிறகு பா.ஜ.க., வலுவாக உள்ளது" தமிழிசை

சென்னை, ஜூன்.08-

அண்ணாமலை வெளியேறிய பிறகு பாஜக வலுவாக உள்ளதாகவும், ரத்தம் சிந்தி, வேர்வை சிந்தி கட்சியை வளர்த்தவர்கள் பாஜகவில் தான் உள்ளனர் என்றும் அக்கட்சியின் மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் சாமி தரிசனம் செய்த தமிழிசை சவுந்தரராஜன், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: பல்வேறு சவால்களை சந்தித்து தமிழகத்தில் பாஜக தொண்டர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீனாட்சியம்மனை தரிசித்து விட்டு வந்து சொல்கிறேன். இந்து மக்களின் உணர்வுகளை, இறைவன், இறைவியை கும்பிடும் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் இருந்ததால்தான் திமுக ஆட்சியை இழந்தது.

மக்களின் உள்ளுணர்வை, இறையுணர்வை ஏதோ மதக்கலவரம் போல் திசை திருப்புவதை ஒருபோதும் ஏற்கமாட்டோம். இறைவனை அன்புடனும், அருளுடனும் கும்பிடுவதை போலத்தான் திருப்பரங்குன்றத்தில் அன்புடனும், பணிவுடனும் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என நினைக்கிறோம்.

திருப்பரங்குன்றத்தில் 2 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையே தொடரும் என மின்துறை அமைச்சர் நிர்மல்குமார் கூறி இருக்கிறார். அவர் அப்படி கூறியதில் ஆச்சரியம் இல்லை. அவருக்கு வெளிச்சம் பிடிக்காது. மின் வெட்டு, இருட்டு தான் பிடிக்கும். அவரது கருத்தை நாம் சகித்துக்கொள்ள முடியாது.

சாமானிய மக்கள், ஏழை மக்களின் உறுதியான உணர்வுகளை மதித்து தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகும் அதை அனுமதிக்கமாட்டோம் என்பது ஆணவத்தின் வெளிப்பாடு. விசில் சத்தம் கொஞ்சம் அதிகமாக கேட்டு விட்டதால், அமைச்சருக்கு பக்தர்களின் குரல் கேட்காமல் இருக்கலாம். ஆனால் பக்தர்களின் குரல் விசில் சத்தத்தை விட உறுதியானது. வலிமையானது.

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் கடந்த ஆட்சியின் தவறை தொடர வேண்டாம். மதக்கலவரத்தை தடுக்கிறோம்; அமைதியை நிலைநாட்டுகிறோம் எனச் சொல்லி பக்தர்களின் உணர்வுகளை காயப்படுத்தக்கூடாது. திருப்பரங்குன்றம் மக்களே ஒன்றிணைந்து விளக்கேற்ற வேண்டும் என உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். இந்துக்களின் பரந்த மனப்பான்மையை



மறுபடியும் இடறக்கூடாது. மக்களின் மத உணர்வை கொச்சைப்படுத்துவது தவறு.

மின்வாரியத்தில் 26 ஹார்டு டிஸ்க்குகள் காணாமல்போயுள்ளன. ஆனால் சில ஹார்டு டிஸ்க்குகள் தான் காணாமல்போனதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஊழலை காப்பாற்றுவதில் அமைச்சர் ஊக்கமாக உள்ளார். 717 டாஸ்மாக் கடைகளை மூடுவதாக கூறினர். அதற்கு பதில் தனியார் மனமகிழ் மன்றங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளனர். டாஸ்மாக் கடைகள் மூடப்படும் இடங்களில் தனியார் மதுபான கூடங்களை திறந்து வருகின்றனர்.

தமிழகத்தில் மக்கள் பாதிக்கப்படுவது இன்னும் குறையவில்லை. கஞ்சா, போதைப் பொருள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. மட்டும் 7 பாலியல் சம்பவங்கள் செய்தியாகியுள்ளன. 70 வயது பெண்ணை பலாத்காரம் செய்துள்ளனர். கள்ளக்குறிச்சியில் 2 பெண் குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளனர். இந்த குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். குற்றங்களை தடுக்க வேண்டிய சிங்கப்பெண்கள் எங்கே போனார்கள் எனத் தெரியவில்லை.

அண்ணாமலை தொடங்கிய இயக்கத்தில் லட்சம் பேர் சேர்ந்துள்ளதை நான் பொருட்படுத்தவில்லை. பாஜகவில் லட்சியவாதிகள் உள்ளனர். ரத்தம் சிந்தி, வேர்வை சிந்தி பாஜகவை வளர்த்தவர்கள் பாஜகவில் தான் உள்ளனர். சுயநலவாதிகள் மட்டுமே சென்றுள்ளனர். பொதுநலவாதிகள் எங்கும் செல்லவில்லை. பாஜக வலுவாக உள்ளது. தாமரையில் ஒரு இதழை கூட யாரும் அசைத்து பார்க்க முடியாது. 2031ல் தாமரை ஆட்சியில் அமரும். கட்சியை விட்டு வெளியேறியவர்களை பற்றி கவலையில்லை. கட்சியில் இருப்பவர்கள் உறுதியாக உள்ளனர்.

பாஜகவின் இன்னொரு முகம் தான் அண்ணாமலை என வன்னியரசு, மாணிக்கம் தாகூர் ஆகியோர் கூறியுள்ளனர். இன்னொரு முகத்தை வைத்து அரசியல் செய்ய வேண்டிய நிலை பாஜகவுக்கு இல்லை. காங்கிரஸில் தான் பல முகங்கள் உள்ளன. திமுகவின் முதுகில் குத்தினர். பாஜகவுக்கு ஒரே முகம் தான். வேறு முகத்தை காட்டி பாஜகவுக்கு மாற்று சக்தி தேட வேண்டியதில்லை. அண்ணாமலைக்கு பிரதமர் மோடி, அமித்ஷாவின் ஆதரவு இல்லை.

இவ்வளவு நடந்தும் பாஜக உறுதியாக இருப்பதை பார்த்து சிலர் கதை கட்டுகின்றனர். அண்ணாமலை வெளியேறியதற்கான காரணத்தை அவரிடம் தான் கேட்க வேண்டும். அண்ணாமலை சென்ற பிறகு பாஜக வலுவாக உள்ளது. அவர் வந்ததால் கட்சி வலுவடையவும் இல்லை; அவர் போனதால் வலுவை இழக்கவுமில்லை.

தவெக அரசு ஒரு மாத ஆட்சியை திக்கித் திணறி கடந்துள்ளது. 30 நாள் அரசின் நடவடிக்கை கவலையளிப்பதாக உள்ளது. இந்த ஆட்சி 5 ஆண்டுகள் நீடிக்குமா என்பது அவர்கள் ஆட்சி நடத்துவதை பொருத்து அமையும். ஆட்சியின் தலை எழுந்து கம்யூனிஸ்ட்டுகள், விசிக கைகளில் உள்ளது. ஆட்சி நீடிக்குமா என்பதை கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் விசிகவை மறைமுகமாக அனுப்பி தற்காலிகமாக முட்டுக்கொடுக்கும் மு.க.ஸ்டாலினிடம் தான் கேட்க வேண்டும். அவர்கள் தற்போது முட்டுக்கொடுக்கின்றனர். முட்டு கொடுப்பதை விலக்கிவிட்டால் ஆட்சி முடிந்துவிடும்.

## சாமானிய மக்களின் வயிற்றில் அடிக்கும் சிலிண்டர் விலை உயர்வு: ஒன்றிய அரசுக்கு எஸ்.டி.பி.ஐ. கட்சி கடும் கண்டனம்!





சென்னை, ஜூன்.08-
சாமானிய மக்களின் வயிற்றில் அடிக்கும் சிலிண்டர் விலை உயர்வுக்கு ஒன்றிய அரசுக்கு எஸ்டிபிஐ கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக எஸ்டிபிஐ கட்சியின் மாநில பொருளாளர் முஸ்தபா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது வீட்டு உபயோக சிலிண்டர் விலையை மத்திய அரசு மீண்டும் உயர்த்தியிருப்பதற்கு எஸ்டிபிஐ கட்சி தனது கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்கிறது.

நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ள இந்த விலை உயர்வின்படி, வீட்டு உபயோக சிலிண்டர் ஒன்றின் விலை 29 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம்தான் சிலிண்டர் விலை 60 ரூபாய் உயர்த்தப்பட்டது. அதன்படி, கடந்த 3 மாதங்களுக்குள் ஒட்டுமொத்தமாக 89 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது. இது, ஏற்கனவே விலைவாசி உயர்வால் தவித்து வரும் சாமானிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் மாதாந்திர பட்ஜெட்டை முற்றிலும் சீர்குலைக்கும் செயலாகும்.

சமீபத்தில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலையும் பெருமளவு உயர்த்தப்பட்ட நிலையில், தற்போது வீட்டு உபயோக சிலிண்டர் விலையையும் உயர்த்தியிருப்பது ஏழை, எளிய மக்களை வஞ்சரிக்கும் செயலாகும். சர்வதேச சந்தையில் ஏற்படும் விலை மாற்றங்களின் அடிப்படையில் தான் இந்த விலை உயர்வு என்று அரசு தரப்பில் வழக்கம்போல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விலை குறையும் காலங்களில், அதன் பலனை மக்களுக்கு வழங்காமல் விலையைக் குறைக்க மறுக்கும் அரசு, விலை உயரும் போது மட்டும் அந்தச் சுமையை உடனடியாக மக்கள் மீது திணிக்கிறது.

மக்களுக்கு எவ்வித நன்மையும் தராத இந்த 'விலை நிர்ணயக் கொள்கை' அப்பட்டமான மக்கள் விரோதப் போக்காகும். எனவே, ஏழை மற்றும் சாமானிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த விலை உயர்வை ஒன்றிய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என எஸ்டிபிஐ கட்சி சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஆம்னி பேருந்துகளை கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்க பிறப்பித்த உத்தரவு ரத்து;"சென்னை நகர் பகுதிகளில் இருந்தும் இயக்கலாம்"



சென்னை, ஜூன்.08-
சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்லும் தனியார் ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்தே இயக்கப்பட வேண்டும் என்ற மாநில போக்குவரத்து ஆணையரின் உத்தரவை ரத்து செய்துள்ள உயர் நீதிமன்றம், மாதவரம் ரவுண்டானா பகுதியிலும் பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்லவும் அனுமதி வழங்கியுள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் கடந்த 2013ல் கிளாம்பாக்கத்தில் புதிதாக பேருந்து முனையம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டது. அதன்பிறகு 2023ல் திமுக ஆட்சியில் திறக்கப்பட்டது. சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்லும் தனியார் ஆம்னி பேருந்துகள் கோயம்பேடுக்குப் பதிலாக, கிளாம்பாக்கத்தில் இருந்தே இயக்கப்பட வேண்டுமென மாநில போக்குவரத்து ஆணையர் கடந்த 2024 ஜன.22ல் உத்தரவிட்டிருந்தார்.

மேலும் ஆம்னி பேருந்துகள் சென்னை மாநகரில் இருந்து பயணிகளை ஏற்றவோ, இறக்கவோ கூடாது என்றும் மீறினால் அபராதம் விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அனைத்து ஆம்னி பேருந்துகள் உரிமையாளர்கள் சங்கத் தலைவரான ஏ.அன்பழகன், தமிழ்நாடு ஆம்னி பேருந்துகள் உரிமையாளர்கள் சங்கத் தலைவரான ஏ.அப்ஸல் மற்றும் தனியார் பேருந்து நிறுவனங்களின் உரிமையாளர்கள் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்குகளை ஏற்கெனவே விசாரித்த உயர் நீதிமன்றம், தனியார் ஆம்னி பேருந்துகளை வழக்கம்போல கோயம்பேட்டில் இருந்து இயக்கலாம் என்றும், போரூர் சுங்கச்சாவடி மற்றும் சூரப்பட்டு சுங்கச்சாவடி ஆகிய இடங்களில் மட்டும் பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்லலாம் என்றும் தென் மாவட்டங்களுக்குச் செல்லும் அனைத்து ஆம்னி பேருந்துகளும் கட்டாயமாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்துக்குள் சென்று பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டுமென இடைக்காலமாக உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கை விசாரித்த நீதிபதி வி.லட்சுமி நாராயணன் பிறப்பித்த உத்தரவு: மோட்டார் வாகனச் சட்ட விதிகளின்படி கிளாம்பாக்கத்தில் பேருந்து முனையம் அமைக்கவும், அதை பராமரிக்கவும் மாநில போக்குவரத்து குழுமத்தின் ஒப்புதல் கோரி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் விண்ணப்பிக்க முடியாது. சம்பந்தப்பட்ட காட்டாங்கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகம் தான் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் ஆம்னி பேருந்துகளை எந்தெந்த வழித்தடங்களில் இயக்க அனுமதியும், உரிமமும் வழங்கப்பட்டுள்ளதோ திடீரென அதை தடுக்கும் விதமாக மாநில போக்குவரத்து குழுமம் உத்தரவிட முடியாது.

எனவே தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் தனியார் ஆம்னி பேருந்துகளை கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்துதான் இயக்கப்பட வேண்டும் என்ற மாநில போக்குவரத்து ஆணையரின் உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மேலும், ஆம்னி பேருந்து உரிமையாளர்களுடன் அரசு போக்குவரத்து துறை அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவின்படி மாதவரம் ரவுண்டானா பகுதியில் இருந்தும் பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்கப்படுகிறது. இவ்வாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில் அரசு பேருந்துகளில் பயணிக்கும் ஏழை, எளியவர்கள் மட்டும் புறநகரில் உள்ள கிளாம்பாக்கம் பேருந்து முனையத்துக்கு சென்று அரசுப் பேருந்துகளை பயன்படுத்தி வரும் நிலையில், ஆம்னி பேருந்துகளுக்கு மட்டும் சென்னை மாநகருக்குள் அனுமதி வழங்குவது ஏற்புடையதல்ல என்றும், உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு தரப்பில் மேல்முறையீடு செய்ய கோரிக்கை எழுந்துள்ளது.

வரவேற்பு: இதனிடையே அனைத்து ஆம்னி பேருந்துகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அன்பழகன் தீர்ப்பை வரவேற்று வெளியிட்ட அறிக்கையில், இத்தீர்ப்பின் மூலம், பயணிகள் பெரிதும் பயனடைவார்கள். தனியார் பொதுப் போக்குவரத்து துறையின் நலன்களை பாதுகாக்கும் முக்கியமான தீர்ப்பாக இது அமைந்துள்ளது. இதற்காக உயர் நீதிமன்றத்துக்கும், வழக்கறிஞர்களுக்கும் நன்றி என தெரிவித்துள்ளார்.

## அரக்கோணம் யார்டில் பொறியியல் பணி: 47 மின்சார ரயில்களின் சேவையில் மாற்றம்




அரக்கோணம், ஜூன்.08-
அரக்கோணம் யார்டில் ரயில் வே பொறியியல் பணி நடைபெற உள்ளதால், 47 மின்சார ரயில்களின் சேவையில் இன்று முதல் வரும் 12ம் தேதி வரை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, அரக்கோணம் திருத்தணிக்கு இன்று (8ம் தேதி) முதல் வரும் 12ம் தேதி வரை அதிகாலை 4, 5 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில்கள், திருத்தணி அரக்கோணத்துக்கு மேற்கண்ட நாட்களில் இரவு 9.15, 11.10 மணிக்கு இயக்கப்படும் ரயில்கள், திருத்தணி சென்னை சென்ட்ரலுக்கு அதே நாட்களில் காலை 6.30 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில் ஆகிய 5 மின்சார ரயில்கள் முழுமையாக ரத்து செய்யப்படுகிறது.

பகுதி ரத்து: சென்னை கடற்கரை அரக்கோணத்துக்கு இன்று முதல் வரும் 12ம் தேதி வரை அதிகாலை 4.05, மதியம் 2.25 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில்கள், ஆவடி அரக்கோணத்துக்கு மேற்கண்ட நாட்களில் காலை 6.20 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில், சென்னை சென்ட்ரல் அரக்கோணத்துக்கு காலை 6.30, 9.10, 10.30, முற்பகல் 11, 12.40, மதியம் 1.25, பிற்பகல் 3.45, மாலை 4.45, 5.15, 5.45, 6.05, 6.40, இரவு 7.30, 8.20, 9.10, 10, 10.55 மணிக்கு இயக்கப்படும் ரயில்கள், திருவாலங்காடு அரக்கோணம் இடையே பகுதி ரத்து செய்யப்படும்.

அரக்கோணம் சென்னை சென்ட்ரலுக்கு இன்று முதல் வரும் 12ம் தேதி வரை அதிகாலை 3.45, 4.25, 5.25, காலை 6.40, 8.15, 8.55, முற்பகல் 11.15, மதியம் 2.25, பிற்பகல் 3.40, மாலை 4.50, 6, 2 7, 7.25, 8.25, 8.50, 9.45 மணிக்கு இயக்கப்படும் ரயில்கள், அரக்கோணம் திருவாலங்காடு இடையே பகுதி ரத்து செய்யப் பட்டுள்ளன. எனவே, இந்த ரயில்கள் திருவாலங்காட்டில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு இயக்கப்படும்.

இது தவிர, அரக்கோணம் கடற்கரை வரை இயக்கப்படும் 4 மின்சார ரயில்கள் பகுதி ரத்து செய்யப்பட்டுள்ளன. மொத்தம், 47 மின்சார ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளன. மேலும், நாளை முதல் வரும் 12ம் தேதி வரை காலை 6.20 மணிக்கு திருத்தணி சென்னை சென்ட்ரல் இடையே சிறப்பு மின்சார ரயில் இயக்கப்பட உள்ளது. இத்தகவல் சென்னை ரயில்வே கோட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அண்ணாமலை இயக்கத்தில் இணைந்தோர் எண்ணிக்கை 15 லட்சத்தை தாண்டியது

### தமிழக பா.ஜ.க., அதிர்ச்சி

சென்னை, ஜூன்.08-
அண்ணாமலை இயக்கத்தில் இணைந்தோர் எண்ணிக்கை நேற்று காலையில் 15 லட்சத்தை தாண்டியது. பாஜகவினர் பெருமளவில் சேர்ந்து வருகின்றனர். இதனால், தமிழக பாஜக தலைமை அதிர்ச்சியடைந்துள்ளது.



தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை புதிய அரசியல் இயக்கத்தை தொடங்கியுள்ளார். மேலும் அவர் தனது கட்சி அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடும் என அறிவித்துள்ளார். அண்ணாமலை நேற்று முன்தினம் அரசியல் கட்சியை தொடங்கியது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டு தனது இயக்கத்தில் சேர்வதற்கான இணையதள முகவரியையும் தெரிவித்தார்.அதில் உடனடியாக பலரும் சேர தொடங்கினார்கள். இந்த நிலையில், தற்போது வரை ( நேற்று காலை 11 மணி) ஆன்லைன் மூலம் அண்ணாமலை இயக்கத்தில் இணைவோர் எண்ணிக்கை 15 லட்சத்தை ( 15,54,066) தாண்டியது. நிமிடத்திற்கு 200, 300 என அடுத்தடுத்து உறுப்பினர்கள் சேர்க்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அவர்களில் பெரும்பாலானவர்கள் பா.ஜ.கட்சியை சேர்ந்தவர்கள். இதனால் தமிழக பாஜக மேலிடம் கடும் அதிர்ச்சியடைந்துள்ளது.

## இந்தி திணிப்பை கண்டித்து ஜூன் 23ல் ஆளுநர் மாளிகை எதிரே ஆர்ப்பாட்டம் தி.மு.க., அறிவிப்பு



சென்னை, ஜூன்.08-
சிபிஎஸ்இ பள்ளிகளில் பாடத்திட்டத்தின் மூலம் இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்தும், பல்கலைக்கழக அதிகாரத்தை பறிக்கும் விபிஎஸ்ஏ முறையை திரும்ப பெற வலியுறுத்தியும் வரும் 23ம் தேதி தமிழக ஆளுநர் மாளிகை எதிரே ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று திமுக மாணவர் அணி செயலாளர் அறிவித்துள்ளார்.

புதுச்சேரி மாநில திமுக மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் தொகுதி மாணவர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திமுக தலைமை அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. மாநில அமைப்பாளர் சிவா தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக மாணவர் அணிச் செயலாளர் வீரமணி கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வீரமணி, "பிஎம்ஸ்ரீ விவகாரத்தில் தமிழக தவெக அரசு மவுனம் காக்கிறது. இதில் பரிசீலனை செய்வதாக தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். கல்வியை அடமானம் வைக்க தவெக அரசு துணிந்து விட்டது. சிபிஎஸ்இ பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையை ஜூலையில் அமலாக்க திட்டமிட்டுள்ளனர். இதை அமலாக்க விடமாட்டோம். சிபிஎஸ்இ பள்ளிகளில் பாடத்திட்டத்தின் மூலம் இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்தும் பல்கலைக்கழக அதிகாரத்தை பறிக்கும் விபிஎஸ்ஏ முறையை திரும்ப பெற வலியுறுத்தியும் ஜூன் 23ம் தேதி தமிழக ஆளுநர் மாளிகை எதிரே ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம். முதலில் 9ம் வகுப்பில் மூன்றாவது மொழிக்கு மதிப்பெண் இல்லை எனக்கூறிவிட்டு பத்தாம் வகுப்பில் மதிப்பெண் கொண்டுவருவார்கள்" என்றனர்.

## தேர்தலில் நாங்கள் தோற்றுதான் போனோம் ஆனால் இறக்கவில்லை

### அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி

சென்னை, ஜூன்.08-
தேர்தலில் நாங்கள் தோற்றுதான் போனோம் ஆனால் இறக்கவில்லை என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி அளித்துள்ளார். வாழ்க்கையில் எத்தனையோ இழப்புகளை பார்த்த எங்களுக்கு எத்தனை விஜய் வந்தாலும் கவலையில்லை. கருத்து வேறுபாட்டால் மாற்றுக் கட்சிக்கு சென்றவர்கள், தெளிவு கிடைக்கும்போது மீண்டும் வருவார்கள்.

விஜய்யின் தவெக கட்சி வேண்டாம் என்று 65 சதவீத மக்கள் மற்ற கட்சிகளுக்கு வாக்களித்துள்ளனர். அதிகாரத்தில் இருப்பதால் நீங்கள் ஆடுபுலி ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். வாழ்க்கை என்பது ஒரு வட்டம், இதுதான் இயற்கை நீதி என்று ஆர்.பி.உதயகுமார் கருத்து தெரிவித்துள்ளார். ஒரு லெட்டர் பேடு கட்சி கூட தவெகவை நம்பி செல்லவில்லை. மாயாஜாலம் போல தவெகவுக்கு ஆட்சி, அதிகாரம் கிடைத்துள்ளது.

மேகதாது அணை கட்டும் விவகாரத்தில் தவெக அரசின் அடுத்த கட்ட நகர்வு மர்மமாக உள்ளது. அதிமுக வெற்றி பெற்றிருந்தால், பல கட்சிகள் மாறிய நிர்மல்குமார் இங்கு வந்திருப்பார். கரூரில் 41 பேர் உயிரிழந்தபோது ஓடி ஒளிந்து கொண்டார் முதலமைச்சர் விஜய். விஜய்யின் பேச்சு ஆணவ பேச்சு, அவருக்கு வரலாறு தெரியாது; தியாகம், போராட்டம் எதுவும் இல்லாமல் வந்துவிட்டார். கைக்கூலிகளை வைத்துக் கொண்டு ஆள்பிடிக்கும் வேலையை செய்கிறார் விஜய். அதிமுகவினரை இழுக்கும் வேலைகளை செய்தால் விஜய் கடும் விளைவுகளை சந்திப்பார் என்று ஆர்.பி.உதயகுமார் பேட்டி அளித்துள்ளார்.

## சிபிஎஸ்இ 9ம் வகுப்பு மாணவர்களுக்கான மும்மொழி திட்டத்தை நிறுத்த பிரதமருக்கு திக்விஜய சிங் கடிதம்

டெல்லி, ஜூன்.08-
நடப்பு கல்வியாண்டின் இடையே சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் 9ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மும்மொழி திட்டம் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதை நிறுத்தி வைக்குமாறு பிரதமர் நரேந்திர மோடியை, காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினரும், கல்வி, பெண்கள், குழந்தைகள், இளைஞர் நலன், விளையாட்டுத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு தலைவருமான திக்விஜய் சிங் இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில், "நடப்பு கல்வியாண்டின் இடையில் மும்மொழி திட்டத்தை கட்டாயமாக்குவதை எதிர்த்து சிபிஎஸ்இ 9ம் வகுப்பு பயலும் மாணவர்களின் பெற்றோர்கள் குழுவிடம் இருந்து கோரிக்கை மனு வந்துள்ளது. அந்த மனுவை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.



அந்த மனுவை ஆய்வு செய்ததில், அதில் எழுப்பப்பட்டுள்ள கவலைகள் நியாயமானவை என்றும் உடனடியாக கவனிக்கப்பட வேண்டியவை என்றும் நான் கருதுகிறேன். போதுமான ஆசிரியர்கள், பாடப்புத்தகங்கள், மாற்றத்துக்கான கால அவகாசம் இன்றி கல்வியாண்டின் இடையில் திடீரென இத்திட்டத்தை அமல்படுத்துவது கடுமையான குழப்பத்தை ஏற்படுத்தும். இது நாடு முழுவதும் லட்சக்கணக்கான மாணவர்களை பாதித்த சிபிஎஸ்இயின் ஆன் ஸ்கிரீன் மார்க்கிங் (ஓஎஸ்எம்) முறையை அவசர அவசரமாக அமல்படுத்தியபோது ஏற்பட்ட குழப்பத்தைப் போன்ற ஒரு சூழலை ஏற்படுத்தக்கூடும்.

மொழிகளுக்கான பாடப்புத்தகங்களை என்சிஇஆர்டி வெளியிடும் வரை பள்ளிகள் மொழிகள் தொடர்பான தற்போதைய பாடத்திட்ட முறையையே பின்பற்ற வேண்டும் என்ற பாடத்திட்டக் குழுவின் பரிந்துரையை கடந்த டிசம்பர் 2025ல் சிபிஎஸ்இ நிர்வாகக் குழு அங்கீகரித்திருந்தது. தனது சொந்த நிர்வாகக் குழுவின் முடிவுக்கு மாறாக 2026 ஜூலை 1 முதல் 9ம் வகுப்பில் மூன்றாம் மொழி பயிற்சியை அமல்படுத்துமாறு சிபிஎஸ்இ 15ம் தேதி சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது. என்சிஇஆர்டி இதுவரை மொழிகளுக்கான தரப்படுத்தப்பட்ட பாடப்புத்தகங்களை வெளியிடாத நிலையில் அதற்குப் பதிலாக என்சிஇஆர்டியின் 6ம் வகுப்பு பாடப்புத்தகங்களைப் பயன்படுத்துமாறு சிபிஎஸ்இ பரிந்துரைத்துள்ளது. நாடு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான பள்ளிகளின் கல்வித் திட்டமிடலை பாதிக்கும் வகையில் சிபிஎஸ்இ தனது நிர்வாகக் குழுவின் முடிவை ஏன் வெளிப்படையாக மாற்றியமைத்தது என்பது தெளிவாக இல்லை.

இந்தி பேசப்படாத தென்னிந்திய மற்றும் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, தற்போதைய 9ம் வகுப்பு மாணவர்களுக்கான இந்த கொள்கை அமலாக்கத்தை உடனடியாக நிறுத்திவைக்க வேண்டும் என்பதே எனது பணிவான பரிந்துரை. இந்த விவகாரம் நீதிமன்ற பரிசீலனையில் உள்ளது என்பதை நான் அறிவேன். ஆனால், நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜூலை 15 அன்றுதான் வர உள்ளது. பள்ளிகள் மூன்றாவது மொழி தொடர்பான அறிவுறுத்தலை ஜூலை 1 முதல் அமல்படுத்த வேண்டும் என சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதால் இதை எழுதுகிறேன்.

லட்சக்கணக்கான மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்த விவகாரத்தில் நீங்கள் அவசரமான, கனிவான கவனத்தை செலுத்துவீர்கள் என்று நான் மனதார நம்புகிறேன்" என தெரிவித்துள்ளார்.

# "கேஸ் விலை உயர்வை திரும்பப் பெற மத்திய அரசுக்கு விஜய் அழுத்தம் கொடுக்க வேண்டும்": பிரேமலதா



சென்னை, ஜூன்.08-
மத்திய அரசிடம் உரிய அழுத்தம் கொடுத்து, கேஸ் விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற முதல்வர் விஜய் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரேமலதா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாட்டின் ஒட்டுமொத்த பண வீக்கமும், விலைவாசி உயர்வும் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் சூழலில், மீண்டும் வீட்டு உபயோக சமையல் எரிவாயு (லிறிநி) சிலிண்டரின் விலையை உயர்த்தி மத்திய அரசு அறிவித்திருப்பது கடும் அதிர்ச்சியளிக்கிறது.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான சமையல் எரிவாயு விலையை கடந்த சில மாதங்களாக தொடர்ந்து உயர்த்தி வரும் போக்கு, ஏழை மற்றும் நடுத்தர மக்களை பாதிக்கிறது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலையை காரணம் காட்டி, எண்ணெய் நிறுவனங்களின் லாபத்திற்காக பொது மக்கள் மீது கூடுதல் சுமையை ஏற்றுவது வன்மையான கண்டனத்திற்குரியது. ஏற்கனவே பெட்ரோல், டீசல் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

அதேவேளையில், தமிழகம் முழுவதும் நிலவி வரும் மின் வெட்டு, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளான கிழக்கு கடற்கரைச் சாலை (ஈசிஆர்) பகுதிகளில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் அறிவிக்கப்படாத தொடர் மின் வெட்டு பொது மக்கள், சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் மாணவர்களின் இயல்பு வாழ்க்கையை கடுமையாகப் பாதித்துள்ளது. எந்த வித முன்னறிவிப்பும் இன்றி பகல் மற்றும் இரவு நேரங்களில் பல மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுவது பொது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பராமரிப்பு பணிகள் அல்லது பிற காரணங்களால் மின்சாரம் துண்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், குறைந்தபட்சம் பொது மக்களுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவிக்கும் நடைமுறையை மின்வாரியம் கட்டாயமாக பின்பற்ற வேண்டும். நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஜூன் 11ம் தேதி முதல்வர் விஜய் டெல்லி செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், அந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் போது கேஸ் விலை உயர்வைக் கண்டித்து, தமிழ்நாடு சார்பில் மத்திய அரசிடம் உரிய அழுத்தம் கொடுத்து, கேஸ் விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

# "மின்துறையின் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை நிறுத்துவதா?" தமிழக அரசுக்கு பா.ஜ.க., கண்டனம்

சென்னை, ஜூன்.08-
மின்துறையின் மிகப் பெரும் திட்டமான ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை நிறுத்துவது அல்லது தாமதப்படுத்துவது முறையற்றது என கண்டித்துள்ள பாஜக, இந்த திட்டத்தை தமிழக அரசு விரைந்து செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.




இது குறித்து பாஜக மாநில தலைமை செய்தி தொடர்பாளர் நாராயணன் திருப்பதி வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் "திறன் அளவி" (Smart Meters) திட்டத்தை கைவிடுவதாக தவெக அரசு முடிவெடுத்துள்ளது என்று வருகிற செய்தி அதிர்ச்சியளிக்கிறது. இந்தியாவில் மின்துறையில் செயல்பட்டு வரும் மிகப்பெரும் சீர்திருத்தமான இந்த ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிடுவது என்பது மிகப்பெரும் தவறு என்பதை முதல்வர் விஜய் உணர வேண்டும். மிகப்பெரும் நஷ்டத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தை மேலும் பெரும் நஷ்டத்தில் மூழ்க வைத்து விடும் அபாயம் உள்ளது.

இணைப்புகளிலும் மத்திய அரசின் புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்தின் (RDSS) கீழ் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தை செயல்படுத்துவது மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். ஒவ்வொரு துல்லியமான கணக்கை எடுத்து கட்டணத்தை உறுதி செய்யும் இந்த திட்டத்தால் மக்களுக்கு பெரும் பயன் விளைவதோடு, அரசின் பல்வேறு தொழில்நுட்ப மற்றும் வர்த்தக இழப்புகள் சரிசெய்யப்படுவதோடு மின்பகிர்மான கழகத்தின் வருவாயையும் சீராக உயர்த்தும்.

இந்த திட்டத்திற்கு ஒரே நேரத்தில் பெரும் முதலீடு தேவைப்படுவதாக அரசு சொல்வது உண்மைக்கு புறம்பானது. முழுக்க முழுக்க மத்திய அரசு நிறுவனங்களின் கடனுதவியோடு, மத்திய அரசின் சலுகைகளோடு, தனியாரின் முதலீட்டோடு உறுதியான கட்டமைப்பை உருவாக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் எதிர்காலதிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவை.

அதிநவீன தொழில் நுட்பத்துடன் கூடிய, குறைபாடுகளே இல்லாமால் நிர்வாகத்தின் இழப்பை சரிசெய்து, மக்களின் தேவைக்கான தரத்தை உறுதி செய்யும் இந்த திட்டத்தை இரு ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய திராவிட முன்னேற்ற கழக அரசு அரசியல் காரணங்களுக்காக தள்ளிப் போட்டதோடு, தங்களுக்கு தேவையான 'வரவு(லஞ்சம்)' இந்த திட்டத்தில் ஒப்பந்தம் கோரிய நிறுவனத்தால் மறுக்கப்பட்டதால் இந்த திட்டத்தின் செலவு அதிகமாக உள்ளது என்று அறிவித்து ஒட்டு மொத்தமாக கிடப்பில் போட்டது. அதே வழியில் இன்றைய தவெக அரசும் பயணித்தால் அது பெரும் பிழையாகி விடும் என்பதை முதல்வர் புரிந்து கொள்ள வேண்டும்

இந்த திட்டத்தை கைவிட்டால், இழப்பை குறைக்கும் நடவடிக்கைகளுக்காக (Loss Reduction) பல்வேறு திட்டங்களின் மூலமாக மத்திய அரசு அளித்து வரும் ரூபாய் 5,000 கோடி அளவிலான நிதிச் சலுகை மற்றும் மானியம் தமிழகத்திற்கு கிடைக் காமல் போய் விடும் என்பதை தமிழக மின்துறை அமைச்சர் நிர்மல்குமார் உரிய அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து, உணர்ந்து கொண்டு பேச வேண்டும்.

எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசுவதும், செயல்படுவதும் தமிழகத்திற்கு பெரும் இழப்பை ஏற்படுத்தும் என்பதோடு மாநிலத்தின் முன்னேற்றத்தை பாதிக்கும் என்பதை முதல்வரும், துறை அமைச்சரும் ஆராய வேண்டும்.

மின்துறையின் மிகப் பெரும் திட்டமான ஸ்மார்ட் மீட்டர் கிட்டத்தை நிறுத்துவது அல்லது தாமதப் படுத்துவது முறையற்றது என்பதை தமிழக அரசு உணர்ந்து உடனடியாக இந்த திட்டத்தை விரைந்து செயல்படுத்த ஆவணம் செய்ய வேண்டும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கதர் சீனியரின் 'சந்திப்பு' பின்னணி; உள்குத்து உளவாளி

சென்னை, ஜூன்.08-
முதன்மையானவரை கோட்டையில் சந்தித்துப் பேசி அளவளாவிய கதர் சீனியர், அடுத்த கட்டமாக தோழர்களையும் சிறுத்தை தலைவரையும் தேடிப் போய் சந்தித்துப் பேசி இருக்கிறார். இதையெல்லாம் பார்த்துவிட்டு, 'அன்புத் தலைவர்' எதற்காக இந்த மூவ் எடுக்கிறார் என்று அர்த்தம் தெரியாமல் கதர் தலைவரின் ஆதரவாளர்களே பெரும் குழப்பத்துக்கு ஆளானார்கள். அதேசமயம், பகலில் நடந்த இந்த சந்திப்புகள் எல்லாம் மீடியாக்களில் செய்தியாகின. அதேசமயம், 5ம் தேதி இரவு சூரியக் கட்சி தலைவரையும் 'மரியாதை நிமித்தம்' சந்தித்துப் பேசினாராம் தலைவர்.

அத்துடன், பெரியார் கட்சி தலைவரையும் சந்தித்துப் பேசி இருக்கிறார். ஆனால், இந்த விவகாரங்கள் வெளியில் வரவில்லை. கட்சிப் பத்திரிகையில் நமது இளம் தலைவரை தாறுமாறாக தாக்குமளவுக்கு ஆத்திரத்தைக் காட்டும் சூரியக் கட்சியுடன் இன்னும் உறவாடும் அளவுக்கு தலைவர் என்ன கணக்கு வழக்கு வைத்திருக்கிறார் என்று தெரியலையே..." என்று மறுகித் தவிக்கிறதாம் அவரது ஆதரவு வட்டாரம். எதிர் முகாமோ, "சொல்லாம போய்ட்டீங்கன்னு சூரியக் கட்சிக்காரங்க தூத்துறாங்க தானே... அதுதான் சொல்லிட்டு வரலாம்னு போயிருப்பார்" என்று கிண்டலடிக்கிறது.

இதனிடையே, தந்தையார் இப்படி சந்திப்புகளை நடத்திக் கொண்டிருக்க, தொகுதிப் பக்கம் அவருடைய வாரிசோ, "இந்தப் பையன் நம்மள விட ஜூனியர். இதுவரைக்கும் நம்மள வந்து பார்க்கல. அதனால, நம்மளும் யாரும் அவரப் பார்க்கப் போகவேண்டாம்" என்று உள்ளூர் அமைச்சரைச் சுட்டிக்காட்டி சொந்தக் கட்சியினருக்கு 'ரிவெஞ்ச்' பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறாராம்.




# 'என் தங்கச்சி ஜட்ஜ்; கமிஷ்னர் அமல்ராஜை தெரியும்' போதையில் போலிஸை மிரட்டிய த.வெ.க., பிரமுகர்



சென்னை, ஜூன்.08-
"என் தங்கச்சி ஜட்ஜ்... கமிஷனரை எனக்கு பிறந்ததிலிருந்தே தெரியும்" எனக் கூறி, நள்ளிரவில் போலீஸாரை மிரட்டும் வகையில் தவெக பிரமுகர் பேசும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

சென்னை ஐஸ் ஹவுஸ் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நாய்கள் கருத்தடை மையம் இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் நள்ளிரவு சுமார் 1 மணி அளவில், அத்துமீறி இந்த மையத்துக்குள் நுழைந்த ஒருவர், அங்கிருந்தவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

அவர் தவெக கட்சியின் சின்னம் பொறித்த டிசர்ட் அணிந்திருந்தார். மேலும், அதிகப்படியான மதுபோதையில் இருந்ததாக கூறப்படுகிறது. அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த போலீஸார், அந்த நபரை தடுத்து நிறுத்தி நள்ளிரவில் இங்கு ஏன் வந்தீர்கள் என விசாரித்தனர். இதனால் ஆத்திரமடைந்த அந்த நபர், போலீஸாரை ஒருமையில் பேசி மிரட்டல் விடுக்கத் தொடங்கினார்.

"என் பெயர் ரமேஷ் முத்து ராமன். நான் ஒரு வழக்கறிஞர். என் தங்கச்சி ஜட்ஜ் ஆக இருக்கிறார். சென்னை மாநகர காவல் ஆணையர் அமல்ராஜை எனக்கு பிறந்ததிலிருந்தே நன்றாகத் தெரியும். ஒரு வழக்கறிஞரையும், ஜட்ஜ் ஆகப்போறவனையும் அசிங்கப்படுத்துகிறீர்களா? நாயைக் காப்பாற்ற வக்கு இல்லாத போலீஸ் நீங்களெல்லாம். எங்கள் முதல்வர் விஜய் 25 நாய்கள் வளர்க்கிறார். என் கருப்புக் கோட்டின் மீது கை வைத்தால், அடுத்த நிமிடமே 10,000 வழக்கறிஞர்களை இங்கு வரவழைப்பேன். அப்புறம் நிலைமையே வேறு மாதிரி ஆகிவிடும்" என்று ஆவேசமாக மிரட்டல் விடுத்து கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார்.

இது தொடர்பான வீடியோ, தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. இது, பொது மக்கள் மற்றும் அரசியல் வட்டாரத்தில் பெரும் விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

# திருச்சி அருகே பிரபல ரவுடி வெட்டிக்கொலை



திருச்சி, ஜூன்.08-
திருவெறும்பூர் அருகே பிரபல ரவுடி வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் அருகே உள்ள அரியமங்கலத்தைச் சேர்ந்தவர் மகபூபாஷா மகன் பாதுஷா (24). பிரபல ரவுடியான இவர், நேற்று முன் தினம் இரவு 11.30 மணியளவில் காட்டூர் பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அப்போது திடீரென தடுமாறி விழுந்த அவரை, மற்றொரு இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து வந்த 3 பேர் வெட்டி உள்ளனர். இதில் சம்பவ இடத்திலேயே பாதுஷா உயிரிழந்தார்.

தகவலறிந்த திருவெறும்பூர் இன்ஸ்பெக்டர் வெங்கடேஸ்வரன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்டனர். திருச்சி எஸ்பி பிரவீன் உமேஷ் டோங்ரே சம்பவ இடத்தை ஆய்வு செய்தார். போலீசார், பாதுஷா உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து திருவெறும்பூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து பாதுஷா கொலை குறித்து விசாரணையை தொடங்கி உள்ளனர். ரவுடி பாதுஷா இருசக்கர வாகனத்தில் சென்று தடுமாறி விழுவதும், பின்னர் 3 பேர் அவரை வெட்டத் துரத்துவதுமான சிசிடிவி வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

போலீஸாரின் முதல் கட்ட விசாரணையில், பாதுஷாவுக்கும், அரிய மங்கலம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் கூடா நட்பு இருந்ததாகவும், இதனால் கடந்த செப்டம்பர் மாதம் ஏற்பட்ட மோதலில் பாதுஷாவின் வலது கையின் கட்டைவிரல் மற்றும் ஆட்காட்டி விரல் துண்டானதாகவும் கூறப்படுகிறது.

ஆயினும் பாதுஷா அந்த பெண்ணிடம் மீண்டும் தொடர்பில் இருந்ததாக கூறப்படுகிறது. அதனால் கொலை நடந்திருக்குமோ என்ற சந்தேகம் போலீஸாருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் ரவுடி கோஷ்டியில் ஏற்பட்ட மோதலா என பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இடுகாட்டில் புதைக்க எதிர்ப்பு; சடலத்தை ரோட்டில் வைத்து மறியல்: இசிஆரில் கடும் போக்குவரத்து பாதிப்பு

விழுப்புரம், ஜூன்.08-
விழுப்புரம் மாவட்டம் வானூர் அடுத்த கோட்டக்குப்பம் நகராட்சிக்கு உட்பட்ட பெரிய கோட்டக்குப்பம் பகுதியில் சுமார் 750க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் குடும்பங்களில் 2500க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். அதன் அருகில் நடுக்குப்பம் மீனவ கிராமம் உள்ளது. அங்கு 250க்கும் மேற்பட்ட மீனவர் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். பெரிய கோட்டக்குப்பம் ஆதிதிராவிடர் மக்களுக்கு, நடுக்குப்பம் கடற்கரை அருகே உள்ள சுமார் 1 ஏக்கர் நிலப்பரப்பில் இடுகாடு அமைந்துள்ளது. இந்த இடுகாட்டின் அருகில் உள்ள கடற்கரை ஒட்டிய பகுதியில் நடுக்குப்பம் மீனவர்கள் படகுகளை நிறுத்தி மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வந்தனர். சுனாமி தாக்குதலுக்கு பிறகு கடலரிப்பு ஏற்பட்டதையடுத்து மீனவ மக்கள் பயன்படுத்தி வந்த கரை பகுதியானது கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டது.



இதனால் மீனவர்கள் தங்கள் படகுகளை பெரிய கோட்டக்குப்பம் தலித் மக்கள் பயன்பாட்டில் உள்ள இடுகாட்டு பகுதியில் படகுகளை நிறுத்தி பாதுகாத்து வந்தனர். இதனால் அவர்கள் இப்பகுதியில் அடக்கம் செய்ய எதிர்ப்பு தெரிவித்து வந்ததால், இரு பிரிவினர்களிடையே அவ்வப்போது பிரச்னை ஏற்பட்டு பதட்டமான சூழல் நிலவி வந்தது. பெரிய கோட்டக்குப்பம் பகுதியைச் சேர்ந்தவர்கள் கடந்த ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கினை விசாரித்த நீதிமன்றம், எட்டு வார காலத்திற்குள் சம்மந்தப்பட்ட இடத்தை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வானூர் வட்டாட்சியர், கோட்டக்குப்பம் நகராட்சி ஆணையர் உள்ளிட்ட 8 பேருக்கு உத்தரவிட்டது. கடந்த ஜனவரி மாதம் இடத்தை அதிகாரிகள் அளவீடு செய்தனர். இதற்கும் மீனவ பஞ்சாயத்தார் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இது போன்ற சூழலில் நேற்று முன்தினம் இரவு பெரியகோட்டக்குப்பம் பகுதியை சேர்ந்த பூமிலிங்கம்(76) என்ற முதியவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அவரது உடலுக்கு இறுதிச்சடங்கு முடிந்து நேற்று மாலை வழக்கமாக இடுகாட்டில் அடக்கம் செய்ய ஊர்வலமாக எடுத்துச்சென்றனர். அப்போது இதனை தடுக்கும் வகையிலும், நடுக்குப்பம் மீனவர்கள் கல், சுளுக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் பெரியகோட்டக்குப்பம் பகுதி ஆதிதிராவிடர் மக்கள் மீது தாக்குதல் நடத்தினர். அப்போது நடந்த கல்வீச்சில் பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் உள்பட ஐந்து பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

இதையடுத்து பெரியகோட்டக்குப்பம் பகுதி மக்கள் இறந்தவரின் சடலத்துடன் கோட்டக்குப்பம் ரவுண்டானா இசிஆர் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த விழுப்புரம் சரக டிஐஜி அருளரசு, விழுப்புரம் பொறுப்பு எஸ்பி ஜெயக்குமார் மற்றும் கோட்டக்குப்பம் டிஎஸ்பி ரூபன்குமார் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது சடலத்தை தற்போதுள்ள இடுகாட்டிலே அடக்கம் செய்ய ஏற்பாடு செய்வதாக போலீசார் உறுதியளித்தனர். இதனையேற்று பெரிய கோட்டக்குப்பம் மக்கள் சாலை மறியலை கைவிட்டனர். தொடர்ந்து போலீஸ் பாதுகாப்புடன் சடலத்தை இடக்காட்டுக்கு எடுத்து சென்றனர். அசம்பாவிதத்தை தடுக்கும் வகையில் இடுகாடு வரை போலீஸ் பாதுகாப்புடன் சவஊர்வலம் சென்றது.

இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் நாளை(8ம் தேதி) காலை விழுப்புரத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்த இரு தரப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சடலத்துடன் நடந்த சாலை மறியலால் புதுச்சேரி சென்னை இருமார்க்கத்திலும் சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக கடுமையாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அப்பகுதியில் பதட்டமான சூழல் நிலவி வரும் நிலையில் அசம்பாவிதம் ஏதும் ஏற்படாமல் இருக்க இரு கிராமங்களிலும் டிஎஸ்பி ரூபன்குமார் தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000